மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நாள் குறிப்பிடாமல் ஒத்தி வைக்கிற வரையில் சட்டமன்றம் நீடித்துக் கொண்டே இருக் கிறது என்று பொருள் ப்ரொரோக் என்று சொல்லிவிட்டால் அது இல்லை.

(உ) அமைச்சர் சுற்றுப்பயண விவர அறிவிப்பு

திரு மு. அம்பிகாபதி ; மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, ஒரு முக்கியமான விஷயத்தை உங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மாண்புமிகு தமிழக கல்வி அமைச்சர் திரு செ. அரங்கநாயகம், எம்.ஏ., பி.டி., பி.எல்., அவர்களின் சுற்றுப்பயண விவரம்—6-4-1982 செவ்வாய்க்கிழமை காலை சென்னையிலிருந்து புறப்பட்டு, விமானத்தில் புறப்பட்டு....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அதில் என்ன விஷயம் என்பதை மட்டும் சொல்லுங்கள். அமைச்சர் சுற்றுப் பயணம் போகக் கூடாது என்று சொல்லுகிறீர்களா?

திரு மு. அம்பிகாபதி ; இது யாருக்கு அனுப்பப்பட்டிருக் கிறது என்றால் திரு. வி. வால்மீகி, என்.பி.எல். தெரு, நெற்குப்பை, திருப்பத்தூர் தாலுக்கா, இராமநாதபுரம் டிஸ டிரிக்ட்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அவர்கள் மறைந்து விட் டார்கள் என்பதைக் குறிப்பிடுவதற்காகச் சொல்லுகிறார்கள். வேண்டுமானால் அந்த அலுவலகத்திலே சொல்லி அந்தத் தவறை நீக்கி விடலாம்; ஏற்பாடு செய்து விடலாம்.

(ஊ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்.

திரு து. இராசரத்தினம் ; மாண்புமிகு தலைவரவர்களே, நான் ஏற்கனவே, 2-ஆம் தேதி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன். இன்றைக்கு அவை இறுதி நாளாக இருப்பதால் அது எடுத்துக்கொள்ளப்படாமல் விடுபடுமே யானால் அது மிகவும் வருந்தத்தக்கதாக இருக்கும். 22-ஆம் தேதி பட்டாபிராம் கலவரம் காரணமாக மிகுந்த கஷ்ட நஷ்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கொட்டகைகள் எரிந்திருக்கின்றன; வைக்கோல் போர்கள் எரிந்திருக்கின்றன. இதுவரையில் சர்க்கார் மூலம் எந்த உபகாரமும் செய்யப்பட வில்லை. உபகாரம் செய்யத்தான் தீர்மானம் கொண்டு வந் திருக்கிறேன். அதை அருள் கூர்ந்து எடுக்கும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1982 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; நீங்கள் கொடுத்தீர்கள். இன்றைக்கு ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டிருக்கிறேன். ஒன்றுதான் எடுக்க முடிந்தது. ஆகவே தான் உங்களுடையது வரவில்லை. வேறு வகையிலே அரசு அதை அணுகும் என்று நம்புகிறேன்.

திரு து. புருஷோத்தமன் : பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே மக்களிடையே ஏற்பட்டுள்ள ஒரு பீதி குறித்து ஒத்தி வைப்புத் தீர்மானத்தைக் கொடுத்திருந்தேன். அதாவது சென்னையில் ரேஷன் கார்டு கொடுப்பதற்காக விவரங்கள் சேகரிப்பவர்கள் வந்து செல்கிறார்கள். ஆனால் பல்வேறு இடங்களில் அப்படிப்பட்ட விவரம் சேகரிப்பவர்கள் செல்வ தில்லை என்ற புகார் இருக்கிறது: தொடர்ந்து இருக்கிறது. குறிப்பிட்டுப் புகார் சொன்னால் கூட அந்த இடத்திற்கு வரவில்லை என்று சொல்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்க வில்லை என்றால் பழையபடி கார்டு இருப்பவர்களே மனுச் செய்யும் நிலை ஏற்படும். ஆகவே, வராத பதட்ட நிலையைக் கவனிக்க வேண்டும். அதைப் போக்க அரசுக்கு இயலுமா என்பதுபற்றிக் கேட்பதற்காக ஒத்தி வைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; ஏற்கனவே சொன்னபடி ஒரு ஒத்தி வைப்புத் தீர்மானத்தை இன்றைக்கு எடுத்துக் கொண்டிருக்கிறேன்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலுள்ள கீழ்ப்பாக்கம் மெடிகல் காலேஜ் ஆஸ்பத்திரிக்குச் சென்றிருந்தேன். அங்கேயுள்ள ஈ.என்.டி. வார்டிலே நூற்றுக்கணக்கான பேர்கள் ஆஸ்பத்திரி யிலே வைத்தியம் செய்து கொள்ள முடியாமல் அவஸ்தைப் படும் நிலைமையை நேரில் பார்த்தேன், ஒரேயொரு டாக்டர் அந்தப் பிரிவிலே வேலை செய்து கொண்டிருந்தார். ஒரு நாளைக்கு 100 பேர்கள், 150 பேர்கள் அவுட்பேஷன்டுகளாக வருகிறார்கள். எனவே, அங்கே இன்னும் இரண்டு டாக்டர் களைப் போஸ்ட் செய்ய வேண்டுமென்பதற்காக அங்கே நடந்த சண்டையை நான் நேரில் பார்த்த காரணத்தால் 30 ஆம் தேதி கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்திருக் கிறேன். அது இதுவரையில் வரவில்லை. இன்றைக்குக் கடைசி நாளாக இருப்பதால், அதற்குப் பரிகாரம் காண வேண்டு மென்பதால் அதை அவையில் எடுத்துக் கொள்ள வேண்டு மென்று கேட்டுக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர். எச். வி ஹண்டே : மாண்புமிகு தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினரவர்கள் சொன்ன கருத்து இன்னும் இரண்டு ஈ.என், டி. ஸ்பெஷலிஸ்ட்ஸ் வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். என்னிடத்தில் அந்த மனுவைக் கொடுத்திருக்கிறார்கள். நிச்சயமாக அரசாங்கம் கவனிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, இராமநாதபுரம் மாவட்டத்திலே விரும்பத் தகாத பல சம்பவங்கள் நடந்தது இந்த அவைக்குத் தெரியும். ஆனால் கடந்த ஐந்தாம் தேதி அன்றைக்கு மீண்டும் இரண்டு ஜாதிகளுக்கிடையே கலவரம் நடந்திருக்கிறது. ஒரு கொலை நடந்திருக்கிறது. பலர் அடிபட்டிருக்கிறார்கள். அது சம்பந்தமாக ஒத்தி வைப்புத் தீர்மானம்....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்றைக்குப் பல ஒத்தி வைப்புத் தீர்மானங்கள் வந்திருக்கின்றன. இந்தக் கூட்டத் தொடர் இன்று ஒருநாள்தான். இன்றைக்கு ஒரு ஒத்திவைப்பு தீர்மானம் எடுத்துக்கொள்ள இருக்கிறேன்.

திரு எஸ். இராசாராமன்: பேரவைத் தலைவர் அவர்களே, நான் குடி இருந்து வருகிற, பேரூராட்சியாக இருக்கின்ற திருவையாற்றில் ஒரு மருத்துவமனை இல்லையென்று....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ஒத்தி வைப்புத் தீர்மானத்தில் வராது. அடுத்தது ஒத்திவைப்புத் தீர்மானம்.

TRUTH ALONE TRIUMPHS

4 ஒத்தி வைப்புத் தீர்மானம்

சென்னை பல்கலைக் கழக 5வது செமஸ்டர் மறு தேர்வு

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் டி. மணி என். பழினிவேல், செ. இராமலிங்கம், அ. ரகுமான்கான், ப. பொன்னுரங்கம், என். வி. என். சோமு, வி. கிருஷ்ணமூர்த்தி, குமரி அனந்தன், ப. நெடுமாறன், எஸ். ஆண்டித்தேவர், இ. முத்துராமலிங்கம், எஸ். என் இராமசாமி, கு. பா. பழனியப்பன், ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொர்ணம், ஜே. ஹேமச்சந்திரன், என். எஸ். வி. சித்தன் ஆகியோர் சென்னைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவர்கள் மூன்றாம் ஆண்டில் எழுதிய 5-வது செமிஸ்ட்டர் தேர்வினை மாணவர்கள் திரும்ப எழுத வேண்டும் என்று